பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித்திட்டம்) செயல்முறைகள், சென்னை–6.

ந.க.எண்.013102/எம்/இ4/2022, நாள்.29.12.2022

பொருள் : உடற்கல்வி 2022–2023ஆம் கல்வியாண்டில் மாநில அளவிலான பாரதியார் தின குடியரசு தின குழுப் போட்டிகள், குடியரசு தின தடகள விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுதல் – மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் கலந்து கொள்ளக் கோருதல் – சார்ந்து.

பார்வை : 1) சென்னை–6, பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித் திட்டம்) செயல்முறைகள் ந.க.எண்.010311/எம்/இ4/2022, நாள்.08.07.2022.

2) சென்னை–6, பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித் திட்டம்) செயல்முறைகள் ந.க.எண்.010311/எம்/இ4/2022, நாள்.15.11.2022.

3) தர்மபுரி மாவட்டம் உடற்கல்வி ஆய்வாளர் செயல்முறைகள் கடித ந.க.எண்.82/2022, நாள்.28.11.2022.

– – – – –

பார்வை–1ல் காணும் இவ்வாணையரக செயல்முறைகளின்படி 2022–2023ஆம் கல்வியாண்டில் அரசு / அரசு உதவி பெறும் / மெட்ரிக் / சுயநிதி நடுநிலை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை கல்வி பயிலும் 14/17/19 வயது பிரிவு மாணவ / மாணவியர்களுக்கு பழைய வகையான விளையாட்டுப் போட்டிகளையும் (RDG / BDG / RDS) மற்றும் புதிய விளையாட்டுப் போட்டிகளையும் (RD / BD New Games) குறுவட்டம் முதல் மாநில அளவிலான போட்டிகள் வரை பாரதியார் தின குடியரசு தினக் குழுப் போட்டிகள் / குடியரசு தின தடகளப் போட்டிகளை பல்வேறு நிலைகளில் எந்தவிதமான புகார்களுக்கும் இடமளிக்காமல் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி முடிக்க அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களுக்கு அறிவுறுத்திட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

பார்வை–2ல் காணும் இவ்வாணையரக செயல்முறைகளின்படி தர்மபுரி மாவட்டத்தில் 03.01.2023 முதல் 08.01.2023 முடிய நடைபெறும் போட்டிகளில் பணிபுரியும் இப்பணிசார்ந்து முன்னேற்பாடுகள் செய்யவும் 02.01.2023 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலகக் கூட்ட அரங்கில் கூட்டத்தில் கலந்துக் கொள்ள ஏதுவாக அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களுக்கும் தகுந்த அறிவுரை வழங்கி உரிய காலத்திற்கு பணிவிடுப்பு செய்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

29/12/22

இணை இயக்குநர்
(நாட்டு நலப்பணித்திட்டம்)

பெறுநர்.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)

நகல்
முதன்மை உடற்கல்வி ஆய்வாளர், சென்னை–6.